[1990 மார்ச் 21

எல்லாம் கூட போடப்பட்டன. பின்னால் ஆய்வு செய்த அதிகாரிகள் மேட்டுப்பாங்கான பகுதியாக இருப்பதால் தண்ணீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்கிற முறையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல சொல்லி, பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் இதற்கு வசதியானது என்று பின்னால் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆகவே, குந்தா கழிவுநீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்றாலும் பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் அவிநாசி, பல்லடம், கோயம்புத்தூர் தாலுக்காக்களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம் என்ற முறையில், அதையாவது இந்த அரசு விரைந்து செயல்படுத்த முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசுக்கு மாறுபட்ட கருத்தில்லை. எனவே தான், கேரளா மாநிலத்தின் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு பேபி ஜான் அவர்களுடன் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, குந்தா அணையிலிருந்து வருகிற தண்ணீர் பவானிசாகர் அணை மூலம் கீழ்பவானி திட்டத்தில் வருகிறது. இன்றைக்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒருமுறைதான் தண்ணீர் விடப்படுகிறது. இந்த நிலையில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிற நேரத்தில் மேலே அணைகளை உருவாக்கித் தண்ணீர் வழங்குவதன் வாயிலாக ஏறத்தாழ $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் பாசனம் செய்கிற கீழ்பவானி பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்களா என்பதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, கீழ் பவானித் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேல் பவானித் திட்டம் வரக்கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்களா ? அது வராது. (சிரிப்பு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம்

* 2075 திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சாப்டூர் மலைப்பகுதியில் பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டத்திற்காக சாப்டூரில் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அணைக்கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் ?

1990 மார்ச் 21]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 933 இலட்சங்கள் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. தேவையான வனத்துறை நிலங்களைக் கையகப்படுத்த வனத் துறையின் ஒத்திசைவும் விரிவான திட்ட அறிக்கைக்கு அரசின் ஒப்புதலும் வழங்கியபின் அணை கட்டும் பணி தொடங்கப்படும்.

மின் இணைப்பில் முன்னுரிமை.

*2704 **திரு. நா. இராமகிருஷ்ணன் :**
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நீர்ப்பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளுக்கு காவிரி நீர் வறண்ட காலங்களில் நன்செய் நிலங்களில் ஆழ்துளை கிணறு போட்டவுடன் மின் இணைப்பில் வழங்கும் முன்னுரிமை கம்பம் பகுதி விவசாயிகளுக்கும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

9-50 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பெரியார் அணையை நம்பி வாழ்கிறார்கள். மழையே பொழியாத காலங்களில், பெரியார் அணையிலிருந்து தண்ணீர் விவசாயிகளுக்குக் கிடைக்காத காரணத்தினால், வயல்களில் ஆழ்துளை கிணறுகள் போட்டு, அதன் மூலமாக அரிசி உற்பத்தியைப் பெருக்குகின்ற அந்த நிலைக்கு, அரசு பம்ப்-செட் மோட்டாரை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆற்றை நம்பி வாழ்கிறார்களா, அணையை நம்பி வாழ்கிறார்களா, என்பதல்ல இங்கு பிரச்சினை. Compulsory Monopoly Procurement— ஏகபோகக் கொள்முதல் செய்கிற பகுதிகளுக்குத்தான், மின் இணைப்புத் தருவதிலே முன்னுரிமை